விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 058 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 03 புதன்கிழமை (15.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பிரபாகரன் தொடர்பில்...

## பழ.நெடுமாறனிடம் விசாரிக்க உத்தரவு

(சென்னை)

தலைவர் பிரபாகரன் தொடர்பில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறனிடம் விசாரிக்க இந்திய உளவுத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு இலங்கை இராணுவம் 15



## தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளாரா?

அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் உள்ளே... 08

# உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்படலாம்?

## தபால்மூலமான வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமான வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான நிதி கிடைக்காததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)




## தலைவர் பிரபாகரன் உயிருடன் இல்லை

### அருட்தந்தை இம்மானுவேல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இல்லை என்று அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமான பிபிசிக்கு அவர் 15

### வடமராட்சிக் கடற்கரையில்

## மீனவரின் சடலம் கரையொதுங்கியது

(கரணவாய்)

கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் கட்டுமரம் கவிழ்ந்ததில் காணாமல்போன மீனவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமைஅதிகாலை வடமராட்சி குடாரப்பு கடற்கரையில் கரை 15

## தேர்தலுக்கான நிதியைப் பெற நீதிமன்றத்தை நாடுங்கள்

### அரசியல் கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள நீதிமன்றத்தை நாடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம்ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளை தவிர ஏனைய அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில்தேசிய தேர்தல்கள்ஆணைக் 15

## சிங்கள மொழியில் பொலிஸ் கட்டளை

### ஏற்க மறுத்த சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை 15

## யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் தோற்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 8 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அதன் தற்போதைய முதல்வர் இ.ஆனல்ட்டினால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வாக்களிப்பில் 40 உறுப்பினர்கள் 15

## தேர்தலை நடத்த அரசு தடையாக செயற்படுகின்றது

### பஃவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தடையாகச் செயற்பட்டு வருகின்றது என பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் புதிய நாடகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது

## தேர்தல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

தபால் வாக்குப் பத்திரத்தை அச்சடிக்க பணம் ஒதுக்குவதில்லை என முடிவு செய்ததிலிருந்து மக்களின் இறையாண்மையை கொள்ளையடிக்கும் அரசின் புதிய நாடகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் ஆணையற்ற அரசாங்கம் தேர்தலை நடத்த பயந்துபோயுள்ளதோடு, இதன் காரணமாக தேர்தலை ஒத்திவைக்கும் சதிகள் இன்னும் முடிந்தபாடில்லை. 22 ஆவது முறையாக தேர்தலை ஒத்திவைக்கும் மற்றொரு கோமாளித்தனமான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், தேர்தலை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான கூட்டுச் சதிகள் சட்டத்தின் முன் ஒவ்வொன்றாக தோற்கடிக்கப்பட்டன.

தேர்தல் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரமமைந்த தேவைப்பாடு என்பதோடு, அதை மீற யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதையும் வலியுறுத்துகிறோம்.

தேர்தல்கள் ஒத்திவைப்புத் தொடர்பாக ஓர் நாடாக நாம் பல இழிவான வரலாற்று நிகழ்வுகளை அனுபவித்துள்ளோம் என்பதோடு, அந்த கறுப்பு நிகழ்வுகளை மீண்டும்மேற்கொள்வதற்கான சூழ்ச்சிகளும் மூடப்பட வேண்டும்.

தேர்தலை ஒத்திவைக்க சதி செய்யும் அனைவருக்கும் எதிராக தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுத்து சட்டத்தின் முன் உச்சபட்ச தண்டனையை வழங்குவோம் என தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, மக்களின் ஜனநாயக உரிமைகளை கடுமையாக மீறும் வகையில் தேர்தலை ஒத்திவைப்பது அல்லது நடத்தாமல் இருப்பது போன்ற கோமாளித்தனமான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் அனைத்து சக்திகளும் ஏனைய அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒரு முகாமில் இணைய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இது இப்போதைக்கு தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பாகும் என்பதோடு, பைத்தியக்கார அரசாங்கம் மக்களின் இறையாண்மையுடன் விளையாட அனுமதிக்கக் கூடாத தீர்க்கமான தருணம் வந்துவிட்டது என்பதையும் நினைவுபடுத்துகிறேன் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7)


**குத்தகைக்கு தேவை**

வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை. தகுந்த கூலி வழங்கப்படும்.

**077 489 1279**

(14617)


# நீதிபதியின் சொகுசுக் காரை திருடியவர் கைதாகி மறியல்

(கொழும்பு)

குளியாப்பிட்டிய மேலதிக மாவட்ட நீதிபதி அமில சம்பத் ஆரியசேனவின் 6 மில்லியன் பெறுமதியான சொகுசுக் காரைத் திருடிய சந்தேக நபர் வத்தளை ஒலியமுல்ல பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன், காரும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

. பிலியந்தலை மடபாத்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினை வாடகைக்குப் பெறுவது போல சென்று இரண்டு மாடி வீட்டில் நீதிபதியை வைத்து பூட்டிவிட்டு காரையும் சந்தேகநபர் திருடிச் சென்றார்.

மேலதிக நீதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சந்தேகநபர், கார் மற்றும் காரில் உள்ள ஆவணங்களை ஒப்படைக்க 5 இலட்சம் ரூபாய் வழங்குமாறு கோரியுள்ளார்.

அழைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிபதியின் சகோதரன் போல் நடித்த பொலிஸ் உத்தியோகத்தர், நீதிபதி அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காரை திருப்பி கொடுப்பதற்கு பணம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 27 வயதுடைய சந்தேக நபர் வத்தளைப் பிரதேசத்துக்கு அழைத்து அவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# கோட்டாவிற்கு ஆதரவான பிக்குகளே 13ஐ எதிர்க்கின்றனர்

## லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பின் ஓர் அங்கமாகும். அதனை எதற்காக எதிர்க்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சார்பான ஓரிரு பிக்குகளே 13 இற்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றனர் என தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் பௌத்த பிக்குகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை அரசியலமைப்பிற்கு எதிரான விடயம் என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் திரு.
**செல்வதயாளரூபன்**

அமரர் திருமதி
**செல்வதயாளரூபன் நாகராணி**

எமது சங்கத்தில் கடமையாற்றிய திரு.செல்வதயாளரூபன் மற்றும் அவரது மனைவி நாகராணி ஆகியோரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோபுரங்கள் சாய்ந்ததே கொடுந்துன்பம்
நேரிட்டதே எங்கள் கோலங்கள்
அழிந்ததுவே ஏது கதி தாங்க முடியாத
துயரத்தில் தவிக்குதைய எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை
இறைஞ்சுகிறோம்!!
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!



தகவல் : முத்தையா வெதுப்பகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(C-5972)



# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபை நேசம்மா



தோற்றம் 25 . 01 . 1935

மறைவு 13 . 02 . 2023

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை நேசம்மா (13.02.2023) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், ரஞ்சிதா, தேவன், யோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சிவசக்தி, அருள்மொலி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பரமசிவம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு அக்காவும், திருமதி சரஸ்வதி, திருமதி புவனேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் கனபதிப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஜந்தன், ரமிலா, ரயூரன், ரஜிவர்மன், வித்யா, ஜெயக்குமார், தட்ஷாயினி, தாரகா ஆகியோரின் அன்பு நிறைந்த அம்மம்மாவும், உமாசங்கர், கஜன், சுபித்தன், நிகர்சிதா, தேஸ்சிறி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சாயிஷ், அத்விக், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.02.2023) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோவிலடி, சித்தன்கேணி. தகவல் - குடும்பத்தினர் (C-5973)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளுக்கு நாள் உக்கிரமடையும் மருந்து தட்டுப்பாடு

# நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் அசமந்தம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்

(கொழும்பு)

**நாளுக்கு நாள் உக்கிரமடையும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் நிஸாந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச மருத்துவனைகளிலும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட பல மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதனை கடந்த பல நாட்களாக நாம் தொடர்ச்சியாக அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகிறோம். 1300 இற்கும் மேற்பட்ட பல்வேறு வகையான மருந்துப் பொருட்கள் காணப்பட்ட போதிலும், இதில் 140 முதல் 150 வரையான சில அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவுகிறது.

அதேவேளை, நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் இன்சுலின், இருதய நோயாளிகளுக்கான ஆஸ்பிரின் மருந்து வகைகள், மெட்பார்மின் மருந்து வகைகள், சிறு குழந்தைகளுக்கான சிரப் வகைகள், வலி நிவாரணி மருந்துகள், மயக்க மருந்துகள், புற்றுநோய் மருந்துகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான மருந்துகள் என மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

மேலும் மூக்கு வழியாக செலுத்தும் குழாய்கள், சிறுநீர் குழாய்கள், இரத்தத்தினை பெற்றுக் கொள்வதற்கான குழாய்கள் போன்றவற்றுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

தேவையான மருந்துப் பொருட்கள் கிடைக்காமையால் நோயாளர்கள் மரணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கத்தின் தலையீடு மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது.

சுகாதார அமைச்சானது இலக்கங்களில் மாத்திரம் 322 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறுவது பயனற்றது. உண்மையில் ஒதுக்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி உடனடியாக தேவைப்படுகின்ற அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

### இலங்கையின் கடன் நெருக்கடி தொடர்பில்

# வட்டமேசைக் கூட்டத்தை அறிவித்தது ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கைக்கு கடனுதவி வழங்குவது குறித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் முதல் பேச்சுவார்த்தையில் சீனா, இந்தியா, சவுதி அரேபியா மற்றும் ஏழு நாடுகள் இணைந்த குழுவின் அதிகாரிகள் பங்கேற்பார்கள் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

எத்தியோப்பியா, சாம்பியா, கானா ஆகிய வருமானம் இல்லாத நாடுகளின் அதிகாரிகளும் இலங்கை, ஈக்வடோர் போன்ற நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் அதிகாரிகளும் இதில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எம்.எப் தலைமையில், உலக வங்கி மற்றும் ஜி20 குழுவின் தற்போதைய தலைவரான இந்தியா ஆகியோரால் இணைந்து நடத்தப்படும் இந்த பேச்சுவார்த்தை 25 ஆம் திகதி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வட்ட மேசை கூட்டம் நடைபெறும் என தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர், மேலதிக விபரங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# யாசகம் எடுக்கும் சிறுவர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை

(கொழும்பு)

யாசகம் கேட்பதற்காக சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சிறுவர் யாசகம் பெறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களே பெரும்பாலும் யாசகம் எடுப்பதற்கு வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# தேர்தலை ஒத்திவைக்க 21 தடவைகள் முயற்சி

## சம்பிக்க சாடல்

(கொழும்பு)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் 21 தடவைகள் முயற்சித்த போதும் அது கைகூடாத நிலையில் தற்போது தேர்தலை நடத்துவதற்குப் பணம் கொடுக்காமல் இருப்பதற்கு முயற்சித்து வருகிறது என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு பல்வேறு திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. இதுவரைக்கும் 21 தடவைகள் இந்தத் தேர்தலை பிற்போடுவதற்காக முயற்சித்திருக்கிறது. அவை எதுவும் கைகூடவில்லை. இந்நிலையில் தற்போது தேர்தலை நடத்துவதற்கு பணம் கொடுக்காமல் இருப்பதற்கு முயற்சித்து வருகிறது.

அத்துடன் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கும் செலவுகளை நிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசியலமைப்பில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டளைகளை பின்பற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

அதனால் நிதி அமைச்சின் செயலாளர் இதனை நினைவில் கொள்ள வேண்டும். சட்டத்தை மதிக்கும் அதிகாரியாக அவர் அந்தக் கடமையை நிறைவேற்றுவார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அரசாங்கம் அண்மையில் விதித்திருந்த வரியின் மூலம் இவ்வாறான 10 தேர்தல்களை நடத்த முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# கடவுச்சீட்டு சேவைகள் மீண்டும் ஆரம்பம் முன்பதிவு செய்தவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடவுச்சீட்டு வழங்குவதில் இடையூறு ஏற்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அலுவலகங்களிலும் கடவுச்சீட்டு வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை கடவுச்சீட்டைப் பெறுவதற்கு நியமனங்களை முன்பதிவு செய்தவர்கள் இன்று புதன்கிழமை திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. இன்று புதன்கிழமை நியமனங்களை முன்பதிவு செய்தவர்கள் நாளை வியாழக்கிழமை திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முன்பதிவு செய்துள்ளவர்களுக்காக எதிர்வரும் சனிக்கிழமை கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வொலிபோல் B தர நடுவர் பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்டன



ஜனவரி மாதம் 21, 22 ஆகிய தினங்களும் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் B தரத்துக்கான செயல்முறை பரீட்சை யா/புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியில் நடைபெற்றது.

பரீட்சையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த C தரத்தில் சித்தியடைந்த மத்தியஸ்தர்கள் தோற்றியுள்ளார்கள்.

10 ஆண்டுகளின் பின்னர் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் ரி. கருணாகரன், செயலாளர் ரி.காந்தரூபன் மற்றும் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் ரவிவர்மன் ஆகியோரின் ஏற்பாட்டில் இலங்கை கரப்பந்தாட்ட சங்கம் தமது சர்வதேச மத்தியஸ்தர்கள் குழுவை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அனுப்பி இந்த செயல்முறை பரீட்சையை நடத்தியுள்ளனர். இந்த செயன்முறைப் பரீட்சையில் அ.றொஸ்கோ, ப.நிதர்சன், இ.போல்ராஜ், கு.கோபிநாத், இ.ராஜ்மோகன், பொ.தார்மிகன், சி.ரஞ்சித்குமார், சி.சிறிரஜீவன், அ.குமாரசிவம், க.துற்ஜெயந்தன், சி.ஜெகஜீவன், ஜெ. அகஸ்ரின் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (4-6-90)

# குருநகர் பாடுமீன் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி



றோயல் விளையாட்டு கழகம் நடத்தும் வடக்கின் சமர் உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் நவஜீவன்ஸ் அணியை எதிர்கொண்டு அரையிறுதியாட்டத்தில் 1:0என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. விறுவிறுப்பான ஆட்டத்தில் ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். முதல் பாதியில் பாடுமீன் அணியின் ஜெரின்சனின் பந்து பரிமாற்றத்தில் சாந்தனினால் ஒரு கோல் பெறப்பட்டது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் எதனையும் போடாததால் பாடுமீன் அணி 1:0 என களத்தில் வெற்றி பெற்றது. (4-6-106)

# மாசி மாத இராசி பலன்கள் 13.02.2023-14.03.2023

## மிதுனம்

**நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிக்கும் மிதுன இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டமத்தில் உள்ள சனியோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் விரயங்களை அதிகரிக்கச்செய்யும். அதே நேரம் மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே செலவிற்கு பயப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்தில் தேவையான தொகை உங்கள் கைக்கு கிடைக்கலாம். இருப்பினும் வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள்.

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் லாபாதிபதி செவ்வாய் சஞ்சரிக்கிறார். எனவே இடம், பூமி விற்பனையும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். இதுவரை இழுபறி நிலையில் இருந்த பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே வாக்கு, தனம், குடும்பம், தாய், வாகனம், ஜீவனம் ஆகிய இடங்களெல்லாம் புனித மடைகிறது. அந்த ஆதிபத்யங்களின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும். குறிப்பாக குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் கிடைக்கலாம். அதிக ஊதியம் தருவதாகச் சொல்லி நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ள முன்வருவீர்கள்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும்பொழுது, பிள்ளைகள் வழியில் பெரும் விரயம் ஏற்படலாம். அவர்களின் மேற்படிப்பு, கல்யாணம் போன்றவற்றிற்காக செலவிடும் சூழ்நிலை ஒருசிலருக்கு அமையும். குறிப்பாக பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் லாபத்தை, தொழிலுக்கு முதலீடு செய்ய முன்வருவீர்கள்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கும் 4 ஆம் இடத்திற்கும் அதிபதியான புதன், 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கும். பொருளாதார வளர்ச்சியில் இருந்த தடைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். சகோதரர்களுக்குள் ஒற்றுமை பலப்படும். தந்தை வழி ஆதரவு உண்டு. கல்வி கேள்விகளில் ஒரு சிலர் முன்னேற்றம் காண்பர்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதனான புதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. செய்யும் காரியங்களில் தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை உண்டு. குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 29 ஆம் திகதி, மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்திற்கு வரும் போது, விரயத்திற்கேற்ற லாபம் கிடைக்கும். எதை எந்த நேரம் செய்ய வேண்டுமோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். ஒரு செயலைச் செய்ய பணம் இல்லையே என்று தயங்கத் தேவையில்லை. காரியத்தை தொடங்கிவிட்டால் நண்பர்களின் உதவி தானாக வந்துசேரும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. அஷ்டமத்துச் சனியை, செவ்வாய் பார்ப்பதால் குடும்பத்திலும், உத்தியோகத்திலும் பிரச்சினை ஏற்படலாம். இனம் புரியாத கவலை மேலோங்கும். பிள்ளைகளை நெறிப்படுத்த இயலாது. விரயங்கள் கூடும். வீடுமாற்றம், இடமாற்றம் வரலாம். திசாபுத்திக்கேற்ற தெய்வ-வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலம் அமைதி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் முற்பாதியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன் - மனைவிக்குள் இணக்கம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் விரயங்கள் கூடும். வீண் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உடன் பணிபுரிபவர்களால் உபத்திரங்கள் உண்டாகும். அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைப்பதும் தாமதமாகலாம்.

## கடகம்

**நல்லது செய்ய வேண்டுமென்று நினைக்கும் கடக இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சனியோடு இணைந்து புதன் சஞ்சரிக்கிறார். 3, 12 இற்கு அதிபதியான புதன் 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சி கைகூடும். உடன் பிறப்புகளின் வழியில் ஒரு நல்ல காரியம் நடைபெறும். குருவின் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால் ஆரோக்கியம் சீராகும்.

ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் உண்டு. பிள்ளைகளின் எதிர்காலம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும்பொழுது புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். பெற்றோரின் ஆதரவோடு பெருமைக்குரிய சம்பவங்கள் நிறைய நடைபெறும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தற்போது இருக்கும் நிறுவனத்தில் இருந்தே, ஒருசில மாதங்கள் வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், அஷ்டமத்தில் மறைவது யோகம் தான். 12 இற்கு அதிபதி 8 இல் மறைவதால் திடீர் பயணங்களும் அதனால் ஆதாயங்களும் உண்டு. சகோதர வழியில் ஒற்றுமை பலப்படும். உடன் பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் சுப காரியங்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு.

**மீன -புதன் சஞ்சாரம்**

மார்ச் 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 12 இற்கு அதிபதி நீச்சம்பெறுவது யோகம் தான். விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டேயிருக்கும். வீடு மாற்றம் உறுதியாகலாம். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களை தீட்டி வெற்றி காண்பீர்கள்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 29 ஆம் திகதி, மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், 10 ஆம் இடத்திற்கு வரும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். அதற்குத் தேவையான முதலீடுகளை வழங்க, நண்பர்கள் உதவியாக இருப்பர். இடம் வாங்கி மனை கட்டும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உறவினர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய புதிய வேலை காத்திருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறும் அதே நேரத்தில், செவ்வாயின் பார்வை சனியின் மீதும் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவு கூடும். இதயம், நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. வீண் விரயங்கள் அதிகரிக்கும். மன அமைதி குறையும். நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. மருத்துவச் செலவுகளும் மனக் கவலையும் அதிகரிக்கும். வருத்தங்கள் குறைய வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்றால், உங்களுக்கு அதில் ஈடுபாடு இருக்காது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக கடன் வாங்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் திடீர் இடமாற்றம் வந்து மனக்கவலையை அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 மில்லியன் அமெ. டொலர்களை இலங்கைக்கு வழங்க ஜப்பான் இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு 38 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

அத்தியாவசிய சுகாதார சேவைகளை எவ்வித தடங்கலும் இன்றி மேற்கொள்வதற்கும் எரிபொருள் கொள்வனவு செய்வதற்கும் குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி)

# முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய, 2 மாதங்களுக்கு தேவையான முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பறவைக் காய்ச்சல் இல்லை என பரிந்துரை கிடைத்துள்ளமைக்கு அமைய இந்த அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



மலர்வு 17.05.1958

உதிர்வு 07.02.2021

அமரர்.

## நித்தியானந்தம் லங்கநாதன்

திதி:தசமி 15.02.2023

நேற்றுக் கண்ட உமை நினைத்து நெஞ்சம் உருமாறுகின்றதே
காலமெல்லாம் உமை நினைத்துருக
கன தூரம் எமைவிட்டுச் சென்றதேனோ?
மங்காத உம் நினைவால் மயங்கியே நிற்கின்றோம்.
தாங்க முடியாத துயரத்தில் தவிக்குதையா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்பன்,
குடத்தனை

மருமக்கள் மற்றும்
குடும்பத்தினர்.

(C-5964)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10.07.1939

இறப்பு 15.02.2022

வைத்திய சிகாமணி அமரர்.பேதுரு பிலிப்ஸ் அவர்களின் பாசமிகு மனைவி

அமரர்.

## திரேசம்மா பிலிப்ஸ்

உதிரம் கொடுத்து உம்
ஊன் உறக்கம் தவிர்த்து
உண்மையை ஊட்டி ஊட்டி
வளர்த்த தாயே! உம்மை
உயிருள்ளவரையும் மறவோம் சேயே.

(14609)

தற்காலிக முகவரி
பிரசாத் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


# இராசிபலன்

15.02.2023
மாசி 03 , புதன்கிழமை
தசமி பின்னிரவு 1.06 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.38 மணிவரை
சுபநேரம் -05.03-6.33 மணிவரை
இராகுகாலம்- 12.33-2.03 மணிவரை

சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகிணி

வளவன்

**மேஷம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கடகம்:** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு.

**மகரம்:** இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் குறையும், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** என்றோ நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நாள், வியாபார விருத்தியுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிக்கு விடும் பணத்தை விட கல்விக்குச் செலவு செய்யும் பணம் பெரிய வருமானத்தைத் தரும்.

# யாழில் பாடல் பாடி அரசை விமர்சித்தார் தயாசிறி



(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர பாடல் மூலமாக அரசாங்கத்தை விமர்சித்திருந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட போதே அவர் "ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்.பொய் பொய்யாய் சொல்லி ஏமாத்தினது போதும்" என்ற பாடலைப் பாடி அரசாங்கத்தினை விமர்சித்திருந்தார்.

அத்துடன் "தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?

உரிமை இழந்தோம் உடைமையும் இழந்தோம் உணர்வை இழக்கலாமா?" என்ற உணர்ச்சிப் பாடலையும் பாடியிருந்தார்.தயாசிறி ஜயசேகர வழக்கமாக யாழ்ப்பாணம் வரும் போது தமிழ் மொழியில் பாடல்களைப் பாடுவதனை வழக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# தெருநாய்கள்,கட்டாக்காலி மாடுகளை மாநகர சபை கட்டுப்படுத்த வேண்டும்

## உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழில் தெருநாய்கள், கட்டாக்காலி மாடுகளை மாநகரசபை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் து.இளங்கோ யாழ். மாநகர சபை அமர்வில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாண மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டு பாதீடு சபையில் சமர்ப்பிப்பதற்கான விசேட அமர்வு முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.வீதிகளில் திரிகின்ற நாய்களை யாழ்.மாநகர சபை கட்டுப்படுத்த வேண்டும்.அத்தோடு மாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டும் இந்த விடயத்தில் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். அதேவேளை யாழ்.மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி மு. றெமீடியஸ் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது , வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான. நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# சட்டத்தரணி ரெமீடியசிற்கு மாநகர சபையில் அஞ்சலி



(அராலி)
வீதி விபத்தில் உயிரிழந்த யாழ். மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி ரெமீடியசிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபையில் நடைபெற்றது.

அதன் முகமாக யாழ்ப்பாண மாநகர சபையில் மாநகர சபை கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடக்கப்பட்டுள்ளதோடு மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களால் இரண்டு நிமிட அக வணக்கமும் செலுத்தப்பட்டது. (4-6-104)

# காரைநகர்-ஊர்காவற்றுறை கடற்பாதை சேவையை பிரதேச சபையிடம் ஒப்படையுங்கள்

## காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(அராலி)
காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான கடற்பாதை சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் அப்பாதையை பயன்படுத்தும் பல தரப்பினரும் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அந்தப் பாதையை காரைநகர் பிரதேச சபை ஆகிய எங்களிடம் தந்தால் அதனை திறம்படச் செய்வோம் என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பிரதேச சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கு பயணிக்கும் உத்தியோகத்தர்களாக இருந்தாலும் சரி பொதுமக்களாக இருந்தாலும் சரி தற்போது பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயக்கப்படுகின்ற குறித்த கடற்பாதை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தால் இயங் காமல் காணப்பட்ட நிலையில் அதற்கான மண்ணெண்ணையை நாங்கள் பெற்றுக் கொடுத்து பாதையை இயங்கச் செய்தோம்.

தற்போது மண்ணெண்ணெய் செலவிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் பாதை சேவையின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சேவை நடைபெறுகிறது. இதனால் காரைநகரில் இருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்றுறையில் உள்ள நீதிமன்றம், பொலிஸ் நிலையம், மருத்துவமனை மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு கடமைக்கு செல்லும் ஊழியர்களாக இருந்தாலும் சரி பொது மக்களாக இருந்தாலும் சரி தனியார் படகுக்கு ஒரு வழிப் பயணத்திற்கு நூறு ரூபாய் கொடுத்து தமது வாகனங்களுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்கின்றனர்.

எமது சபையிடம் அந்தப் பாதையை ஒப்படைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு இதுவரை எந்தவிதமான பதிலும் வழங்கவில்லை. இந்தப் பாதையை எம்மிடம் வழங்கினால் சிறப்பான சேவையை எம்மால் வழங்க முடியும் எனத் தெரிவித்தார். (4-6-104)

# கனேடியத் தூதுவர் எரிக் வல்ஸ் யாழ்.பல்கலைக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)
இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடியத் தூதுவர் எரிக் வல்ஸ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யாழ்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினால் நடாத்தப்படும் என்லீப் செயற்றிட்டத்தின் மீளாய்வுக்காகவே கனேடியத் தூதுவர் தலைமையிலான குழு பல்கலைக் கழகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின் போது, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி எஸ். கே. கண்ணதாஸ ஆகியோருடனும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை மாணவர்களுடனும் கனேடியத் தூதுவர் கலந்துரையாடி, நிலைமைகளைக் கேட்டறிந்தார். (4-6-33)



அகில இலங்கை சைவ மகா சபையினரால் வருடா வருடம் வழங்கப்பட்டு வரும் அன்பே சிவம் விருது இம்முறை சிவத்திரு. ஆ. நவரட்ணராசாவிற்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-கஜிந்தன்)



இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, நாளை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடமாடும் சேவை நாவாந்துறை சென். நீக்கிலாஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 10,11,12 மற்றும் 13 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல், படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இது வரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அத்துடன் நடப் பாண்டின் ஆதன வரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதன வரியின் 5% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம் - 01**
**ஆதன இலக்கம் : 144/6**
**சுதுமலை வீதி**

வட்டாரம் 01, சுதுமலை வீதி, ஆதன இலக்கம் 144/6 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை **"சான்றான் தோட்டம்"** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குழி 3.85 கொண்ட இவ்வாதனமானது மானிப்பாயைச் சேர்ந்த நேசராசா தபேந்திரன் அவர்களால் அதே இடத்தைச் சேர்த்த விஜயமோகன் துவாரகன் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.அருட்பிரகாசம் நிறோசன் முகதாவில் நிறைவேறிய 143 ஆம் இலக்க 2021.07.21 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை ஆதனப் பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். எமது ஆதனப் பதிவேட்டின்படி மருதப்பு கந்தையா என காணப்படுகின்றது. இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு திரு.அருட்பிரகாசம் நிறோசன் முகதாவில் நிறைவேறிய 81 ஆம் இலக்க 2021.03.14 ஆம் திகதிய உறுதி மூலமும் பிரசித்த நொத்தாரிஸ் திரு.சோமசுந்தரம் திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 7542 ஆம் இலக்க 1958.09.11 ஆம் திகதிய நன்கொடை உறுதிப்படி குறித்த மருதப்பு கந்தையா சொத்துறுதியின்றியும் வாரிசுகளின்றியும் பெற்றோர்களின்றியும் இறக்க அவர்களின் சகோதரர்களாகிய மருதப்பு முருகேசு, மருதப்பு பொன்னுத்துரை ஆகியோரும் இறக்க முருகேசுவின் மகனான முருகேசு விஜயமோகன் ஆகிய் தனக்கு வந்தடைந்துள்ளது என வெளிப்படுத்தல் உறுதி முடித்துள்ளார். நில அளவையாளர் திரு.வி.பிரணவன் அவர்களால் வரையப்பட்ட 410 ஆம் இலக்க 2021.07.17 திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் **"சான்றான் தோட்டம்"** நிலப்பரப்பு 03 குழி 3.85 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து **விஜயமோகன் துவாரகன்** என்பவர்களுக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(14610)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: சூரி 4 செவ் 10 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
(முகாமையாளர் த்னியார்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/13344

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா:45 ¾சூரி 8 செவ் 7இல்
தகைமை/ தொழில்:Software Engineer
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13346

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா:16 சூரி 4 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பாடசாலை அலுவலக உதவியாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13347

பிறப்பு:1989 கிறிஸ்தவம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/L டுபாய்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13348

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா:74 ½ சூரி 9 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BBA Business Analyst
எதிர்பார்ப்பு:படித்தவர் வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13375

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 30 சூரி 5செவ் 7
உயரம்:5'1"
தகைமை/தொழில்:A/L(தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13376

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 1
கி.பா:சூரி.செவ்7இல்
தகைமை/தொழில்: மருத்துவபீட இறுதி ஆண்டு
எதிர்பார்ப்பு: வைத்தியர்,பொறியியலாளர்
தொ.இ: G/13377

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 2
கி.பா:சூரி .செவ் 11 இல்
தகைமை/தொழில்: BA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் மட்டும்
தொ.இ: G/13378

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



ICCR
सत्यमेव जयते
75 Azadi Ka Amrit Mahotsav

**இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தின**
**"ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்"**
**கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக**
**யாழ் இந்திய துணைத் தூதரகம்,**
**மற்றும்**
**இந்திய கலாசார உறவுகளுக்கான பேரோயம் (ICCR)**
**இணைந்து வழங்கும்**

# கர்நாடக இசை கச்சேரி

**இந்தியாவின் பிரபல**
**கர்நாடக இசை கலைஞர்**
**கலாநிதி அருந்ததி பகவதீஸ்வர ஐயர்**
**மற்றும் அவருடைய குழுவினர்.**



**காலம் : 15 பெப்ரவரி, 2023**
**இடம் : யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்**
**நேரம் : மாலை 6.00 மணிக்கு**

இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (சி-5963)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வருவார் என்ற போது



## உயிரிழந்த செய்தியை தேடி அலைய தேவையில்லை

### சிறிதரன் எம்.பி



**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் வருவார் என்ற போது உயிரிழந்த செய்தியை தேடி அலைய வேண்டிய தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடனும் நலமுடனும் இருப்பதாகவும், உரிய நேரத்தில் மக்கள் முன் வருவார். ஆனால் எங்கு உள்ளார் என்பதினை தற்போது அறிவிக்க இயலாது எனவும் உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்து அறிவித்திருந்தார்.

பழ.நெடுமாறன் தெரிவித்த இந்த கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், பிரபாகரன் உயிருடன் இல்லை என்று இலங்கை இராணுவம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தது.

மேலும் விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தற்போது உயிருடன் இல்லை. 2009 மே 18 இல் நடந்த இறுதிக்கட்ட போரில் அவர் உயிரிழந்ததற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது என்று இலங்கை இராணுவம் மறுப்பு வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், பழ.நெடுமாறனின் இந்த அறிவிப்பு தற்போது அரசியல் வட்டாரத்தில் பெரும் பேசுபொருளாகியுள்ளதுடன் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இது தொடர்பில் இணைய ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தேசிய தலைவரின் வருகைக்காக உலக வாழ் தமிழ் மக்கள் காத்திருக்கின்றோம். அவரின் வருகை பழ.நெடுமாறனின் கருத்துப் போன்று உண்மையாக வேண்டும்.

அவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் வந்தால் உலகில் சிறந்த இனமாக தமிழினம் அடையாளப்படுத்தப்படும். அதற்காக காத்திருக்கின்றோம்.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் வருவார் என்ற போது அவரின் மரணம் தொடர்பான செய்திகளை ஆராய வேண்டிய தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.



## 13 வருடங்களாக தொடரும் விவாதம்

### கஜேந்திரகுமார் எம்.பி



பழ.நெடுமாறனின் அறிவிப்பின் உண்மைத்தன்மை தொடர்பாக என்னால் எதுவும் கூற முடியாதுள்ளது. பிரபாகரன் உயிருடன் உள்ளதாக தமிழ் நாட்டில் வெளியான தகவலை தொடர்ந்து இந்த விடயம் இன்று பேசுபொருளாகியுள்ளது.

தேசியத்தலைவர் உயிரோடு இருக்கின்றார் அல்லது அவர் வீரச்சாவடைந்துவிட்டார் என்ற விவாதம் கடந்த 13 வருடங்களாக இடம்பெற்று வருகிறது.

எனவே அவர் இருக்கின்றாரோ அல்லது இல்லை என்ற விவாதத்திற்கு அப்பால் தேசியத்தலைவர் எந்த இலட்சியத்திற்காக உறுதியாக இருந்தார் என்பதை உணர்ந்து அந்த கொள்கைக்கு நேர்மையாக பயணிப்பதே தமது கடமை.

## பிரபாகரன் இல்லை என்பதே உண்மை ஆனால் இறப்பில் இன்றுவரை குழப்பம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



பிரபாகரனின் மரணம் தொடர்பான தமிழக தலைவர்களின் இவ்வாறான கருத்துக்கள் இலங்கை தமிழர்களை கஷ்டத்திற்கு உட்படுத்தும்.

பழ.நெடுமாறன் அறிந்து கதைக்கின்றாரா? அறியாமல் கதைக்கின்றாரா? என்பது அவருக்கே வெளிச்சம். ஆனால் என்னை பொறுத்த வரையில் எனது அனுபவத்தில் பிரபாகரன் உலகத்திலேயே இல்லை என்பதே என்னுடைய தகவல்.

ஆனால் அவர் என்ன மாதிரி இறந்தார் என்றதில் வாத பிரதிவாதங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் இப்போது கதைக்க விரும்பவில்லை.

## பிரபாகரன் மறையவில்லை அவர் உயிரோடுதான் உள்ளார்

### திருச்சி வேலுச்சாமி



பிரபாகரன் இறக்கவில்லை என்பது அவரை சடலமாக காட்டிய போதே தெரியும். பிரபாகரனின் அருகிலேயே இருந்த நபர் ஒருவர் அவர் தப்பி விட்டார் என எனக்குத் தெரிவித்தார்.

அப்படி கூறியவர் இன்றும் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். பிரபாகரன் உயிரோடு தான் இருக்கிறார். அவர் நிச்சயம் திரும்பி வருவார்.

இதை நான் வேடிக்கையாக சொல்லவில்லை.

அதற்கு உறுதியான காரணங்கள் என்னிடம் உள்ளன.

## பிரபாகரன் உயிரோடு இருந்தால் மகிழ்ச்சி

### தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி



பிரபாகரன் உயிரோடு இருந்தால் மகிழ்ச்சி தான்.

அவர் வந்தால் நான் சந்திப்பேன்.

அதில் ஒன்றும் மாற்று கருத்து இல்லை.

## பிரபாகரன் மாவீரன் மறைந்து வாழும் தலைவரல்ல

### தமிழ்நாடு மக்கள் முன்னேற்றக்கழகத்தின் தலைவர் ஜான்பாண்டியன்



"மறைந்து வாழும் பழக்கம் பிரபாகரனுக்கு கிடையாது. பழ. நெடுமாறன் கூறிய கருத்திலிருந்து நான் முரண்படுகிறேன். பிரபாகரன் தொடர்பாக பழ.நெடுமாறன் கூறியிருப்பது தவறான முன் உதாரணம்.

மக்களிடையே இதுபோன்ற தவறான தகவல்களை பரப்புவதற்கு என்ன காரணம்? என அவர் பதில்சொல்ல வேண்டும்.

பிரபாகரன் மாவீரன். மறைந்து வாழும் தலைவர் அல்ல.

## காணொளி வெளியிட்டு உறுதி செய்யட்டும் - கொளத்தூர் மணி



தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பது உண்மையாக இருந்தால் தாமாகவே காணொளி செய்தி வெளியிட்டு உறுதிப்படுத்தலாம்.

## அவருடைய வரவு நல்வரவாக இருக்கட்டும்

### அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வைகைசெல்வன்



பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்கிற செய்தி மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்று. எதிரியாக இருந்தாலும் உயிரோடு இருக்கிறார் என்கிற செய்தி மகிழ்ச்சிதான் அளிக்கும். பிரபாகரன் உயிரோடு வந்தால் பல்வேறு மர்ம முடிச்சுகள் அவிழும்.

தமிழக மக்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் கிடைக்கும். அவருடைய வரவு நல்வரவாக இருக்க வரவேற்கிறோம்.

## பிரபாகரனின் மரணம் டி.என்.ஏ பரிசோதனையில் உறுதி

### பாதுகாப்பு அமைச்சின் ஊடகப்பணிப்பாளர்



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக இந்திய அரசியல்வாதி கூறுவது உண்மைக்குப் புறம்பானது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் டி.என்.ஏ பரிசோதனையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## டி.என்.ஏ பரிசோதனை அறிக்கையை எம்மிடம் காண்பியுங்கள்-சிவாஜிலிங்கம்



பிரபாகரனின் உடல் என ஒரு உடலை இலங்கை அரசு காட்டிய போது, அது அவருடைய உடல் அல்ல, முடிந்தால், மரபணு பரிசோதனை அறிக்கையை காண்பிக்குமாறு சவால் விடுத்திருந்தேன். இதுவரை அவர்கள் காண்பிக்கவில்லை.

அவருடைய மரண சான்றிதழை கூட அரசாங்கம் இன்னும் பதிவு செய்யவில்லை. நீதிமன்றத்தில் ஒரு அறிக்கையை மாத்திரம் தாக்கல் செய்தார்கள். இந்த பின்னணியில் பழ.நெடுமாறன் ஐயா இந்த செய்தியை சொல்லியிருக்கின்றார் என்றால், எனக்கு தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், அவருக்கு தெரிந்திருக்கின்றது என்பதற்காக எனக்கு தெரிந்திருக்க வேண்டும் என்று இல்லை. இந்த அறிவிப்பானது, உலக தமிழர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## சர்வதேச சிறுதானிய வருடம் - 2023 இனை முன்னிட்டு சித்தமருத்துவமும் சிறுதானியங்களும் தொடர் வாரக் கட்டுரைகள்




Batanical Name- Pennisetum typhoideum

இது தானிய வகையைச் சேர்ந்தது.

சுவை- இனிப்பு

தன்மை–தட்பம்

பிரிவு- இனிப்பு

Action- உரமாக்கி, பலகாரி Tonic

"கம்புமாக கூழுணக் காத் திரத் தூய்தாம் " (தே.கா)

பொருள்:- கம்பு மாவின் கூழ் உடம்பினை தூய்மையாக்கும்.

கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவார் காண் பம்பு சொறிசிரங்கைப் பாலிக்கும்– வெம்பு

முடலின் கொர்திப்பகற்றும் உட்பல முண்டர்க்கு மடலயிற் கண் மாதே அறி.

குணம்:- கம்பு அரிசியினால் நெருங்கிய நமைச் சலையும் சிரங்குகளையும் வீரியத்தையும் உண்டாக்கும் சரீர வெப்பத்தை நீக்கும் குளிர்ச்சி என்பர்.. (அ. குணவாகடம்)

செய்கை:- சீதளகாரி, காமவிர்த்தனி.

**உபயோகிக்கும் முறை**

1.இதனை உரலிலிட்டு நன்றாய் குத்தி உமி, தவிடு முதலியவற்றை நீக்கும் பொருட்டு நன்றாய் புடைத்துச் சமைத்து உண்பது முண்டு.

2. இன்னும் இதனை மாவாக அரைத்து களியாகவும், அடையாகவும் சுட்டு சாப்பிடுவதுண்டு.

3. இது மலத்தை நன்றாய் தள்ளும், தாதுவை பலப்படுத்தி தேகத்தின் வெப்பத்தை தணிக்கும்.

4. ஆனால் சரீரத்தில் நமைச்சலையும் , சிரங்குகளையும் உண்டாக்கும்.

**கம்பஞ்சாதம்**

"கம்பினது சாதத்தாற் காச சுவாசஞ் சிரங்கும் பம்பும் உடல் மிகப் பாரிக்குஞ்:-செம்பாலோ

வற்றுவது மந்திநிற மாறு மென்பார் வாமமெலா

முற்றுமுலை மாதே! மொழி" (அ-கு)

கம்பரிசி கூழில் சிறிது ஆவின் தயிராவது மோராவது அதிகாலை தோறும் பருகிவரின் குடற்புண் எரிவு சாந்தமாகும்.

கம்பை சமைத்து எருமைத் தயிர் விட்டுப பிசைந்து முலை மூலத்துக்கு கட்டிவர குணமுண்டாகும்.

கம்பு எனும் சிறு தானியமும் gluten froo ஆக இருப்பதால் ஒவ்வாமை இருப்பவர்களுக்கு பாதுகாப்பான ஆரோக்கிய உணவாகும். கம்பு அரிசியில் Golden yellow fatty oil காணப்படுகிறது.

அத்துடன் லினோலிக்கமிலமான அத்தியாவசியமான கொழுப்பு அமிலமும் காணப்படுகின்றது. மன அழுத்தம், பாரிசவாதம் வராமல்·தடுக்க மேலே கூறிய கொழுப்ப மிலங்கள் காரணமாகிறது.

அதிகளவில் பிளேவனொயிட்ஸ் காணப்படுவதால் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க உதவுகின்றது.இதில் காணப்படும் போசனைக் கூறுகளாக அதிகளவு புரதம் நல்ல கொழுப்பு, உயிர்ச்சத்து பி , உயிர்ச்சத்து ஏ , கல்சியம் நாகச்சத்து பொட்டாசியம் போன்றன காணப்படுகின்றன.

கம்பரிசியானது உடல் எடையை குறைப்பதுடன் ஆரோக்கியத்தையும் பேணக் கூடியதாக இருக்கும். உயிர்ச்சத்து B Complex காணப்படுவதால் சரும பாதுகாப்பிற்கும், முடிவளர்ச்சிக்கும் அத்தியாவசியமாகும்.

கம்பரிசியை பயன்படுத்த முன்பு தண்ணீரில் அல்லது மோரில் ஊறவைத்து எடுக்கும் போது சத்துக்கள் இலகுவாக இறங்குவதுடன், இலகுவில் அகத்துறிஞ்சப்படகூடியதாக இருக்கும்.அல்லது கம்பை ஊறவத்து, முளைகட்டிய பின்பும் உணவாக பயன்படுத்தலாம்.

**சிறுதானிய சத்து மா**

3 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பயன்படுத்தலாம்.

கொள்ளு–500, கிராம் குரக்கன் -500 கிராம் , முழுக்கோதுமை அரிசி- 500 கிராம் ,கம்பு–500 கிராம் ,குதிரைவாலி -500 கிராம், சிவப்பு அரிசி–500 கிராம், சாமை அரிசி–500 கிராம்.

தனித்தனியாக நன்கு கழுவி நீரை வடித்து ஒன்று சேர்த்து நிழலில் நன்கு உலர்த்தி மில்லில் கொடுத்து திரித்து, வறுத்து ஆறவிட்டு அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி தயாரித்த சத்துமாவில் இருந்து கூழ், கொழுக்கட்டை , களி போன்றன தயாரித்து பயன்படுத்தலாம்.

கம்பு ஆனது வறட்சியை தாங்கி வளரக் கூடியது.செடி வகையை ச் சார்ந்தது. காலை உணவாக எம் முன்னோர்கள் கம்பைகஞ்சியாக்கி அருந்தினர்.

எல்லா ஊட்டசசத்துக்களும் கம்பரிசியில் நிறைவாகக் கா்ணப்படுவதால் உணவுச் சத்து தரத்தில் முதலிடம் வகிக்கின்றது.

அரிசியைவிட கிட்டத்தட்ட 8 மடங்கு இரும்புச்சத்து கம்பரிசியில் உள்ளது உடற் சோர்வு ஏற்படுபவர்கள் கம்பை கூழாக்கி அதனுடன் மோர் கலந்து எடுக்க வேண்டும்.

# ஒருதரம் பயன்படும் பிளாஸ்ரிக்கிற்கான தடை:மாற்றம் முதலில் எம்மிலிருந்து



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அசேதனப் பசளைகளும் அசேதன பீடைகொல்லிகளும் இணைந்த அசேதன இரசாயனப் பாவனையைக் குறைப்பது அவசியம் என்பதனை நாம் அடையாளப்படுத்தினாலும் விவசாயிகளின் பக்கத்தில் பயிர் செய்வதற்கான அசேதனப் பசளைகள் மிக அவசியமாகவே தேவைப்படுகின்றது. பயன்படுத்திப் பார்த்தவற்றை உடனடியாக விட்டு எமது பயிர்ச் செய்கையை நாம் செய்திட முடியாது. மெல்லமெல்லதான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

சூழல் மாசடைவதற்கான இன்னொரு பொருள் நாம் அதிகளவில் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் வகைகளாகும். இவ்வாறான பொலித்தீனை பிரிந்தழியச் செய்வதற்கான வழிவகைகளை விஞ்ஞானிகள் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இவற்றுள் ஒன்றுதான் பொலித்தீனை பிரிந்தழியச் செய்யும் புழுக்களாகும்.

தற்போது பிளாஸ்ரிக்கினை உணவாக்கக் கூடிய பூச்சியொன்றை கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவ்வகைப் பூச்சி தேனீக் குடியில் மெழுகிலான வதையை உண்ணக்கூடிய மெழுகு அந்துப்பூச்சி என அழைக்கப்பட்டதாகும். இவ்வகை புழுக்கள் பிளாஸ்ரிக்கினை உண்ணக்கூடியதாக அறியப்படுகின்றது. ஸ்பெயின் நாட்டில் கன்ரா பிறியா உயிர் மருத்துவம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் விஞ்ஞானியாக கடமை புரியும் பெடரிக்கா பேட்டோச்சினி என்பவர் தற்செயலாகக் கண்டுபிடித்துள்ள இவ்விடயம் தற்போது பலரும் ஆய்வுக்குட்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்த மெழுகு அந்துப் பூச்சியினுடைய புழு பிளாஸ்ரிக்கினை உண்டு பிரிந்தழியச் செய்யக் கூடியதாக இருப்பதாக ஆய்வுகளில் அறியப்பட்டுள்ளன. அவருடைய கணக்கின் படி 14 மணித்தியாலங்களில் 13 சதவீதமான பிளாஸ்ரிக்கினை உண்டு சமிபாடடையச் செய்யக் கூடியனவாக இப் புழுக்கள் இருக்கின்றனவாம். அதுவும் உணவாகக் கொள்ளும் பிளாஸ்ரிக் ஆனது புழுவின் உணவுக் கால்வாயில் காணப்படும் எதிலீன் கிளைக்கொல் எனப்படும் இரசாயனம் பொலித்தீனை பிரிந்தழியச் செய்கின்றதாகக் கண்டிறியப்பட்டுள்ளது.



வழக்கமாக பிளாஸ்ரிக்கானது பிரிந்தழிய ஏறக்குறைய 100 தொடக்கம் 400 வருடங்கள் தேவைப்படும் என அறியமுடிகின்றது.

இதனை அடிப்படையாக வைத்து பிளர்ஸ்ரிக்கினை பிரிந்தழியச் செய்யும் வழி வகைகள் பற்றி ஆய்வுகள் பலவாறாக நடத்தப்பட்டன. இந்தத் தேடலில் 2011 இல் ஒருவகை பூஞ்சணம் பொலியூறதேனை பிரிந்தழியச் செய்யக் கூடியது என கண்டுபிடிக்கப்பட்டது. 2014 இல் மெழுகுபுழுக்களின் சமிபாட்டுத் தொகுதியில் காணப்படும் ஒரு வகை பக்ரீறியாக்கள் இரண்டு மாதங்களுக்குள் பொலித்தீனை சமிபாடடையச் செய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பெடரிக்கா பேட்டோச்சினியின் ஆய்வின் முடிவுகள் மெழுகுஅந்துப் பூச்சிகளின் புழுக்கள் பிளாஸ்ரிக்கினை விரைவாக பிரிந்தழியச் செய்யக் கூடியன என நிருபிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான புழுக்கள் ஒட்சிசன் இல்லாத பொதுவாக கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தில் உயிர் வாழ மாட்டாதவையாகும். அதனால் இது பற்றி ஆய்வுகள் இன்னும் விரிவாக நடத்தப்படல் வேண்டும். இதைப் பற்றி எழுதுவதன் நோக்கம் எமது பிரதேசத்திலும் இவ்வாறான உயிரினங்கள் காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

வாருங்கள் எம்மினிய எமது உறவுகளே! எமது சூழலை நன்றாக அவதானியுங்கள். எமது பகுதியிலும் பிளாஸ்ரிக்கினை பிரிந்தழியச் செய்யும் அங்கிகள் நிச்சயமாக இருக்கும். கண்டுபிடிப்புக்களுக்கான தளம் இது. எமது பலமுள்ள அறிவுத் திறமையை இவ்வாறான புத்தாக்கங்களில் நாம் ஈடுபடுத்துவோமானால் உலகத்துக்கான பல செய்திகளை கண்டுபிடிப்புக்களை நாமும் வெளிக்கொணரலாம்.

பிளாஸ்ரிக்கின் பாவனையை வெகுவாகக் குறைக்கும் நோக்கில் எமது அரசாங்கம் எடுத்துள்ள கடின முயற்சியினை பாராட்டியே ஆக வேண்டும். காலந்தாழ்த்தியென்றாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டதனை அனைவரும் வரவேற்க வேண்டும். வெறுமனே வரவேற்றால் மட்டும் போதுமா? நாமும் செயலில் இறங்க வேண்டும். செயற்படுத்திக் காட்ட வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

பிளாஸ்ரிக்கின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு பல வழிகளை முன்மொழியலாம். எதனைக் கூறினாலும் அதனை நாம் நடைமுறையில் கடைப்பிடித்தால் மட்டுமே இவற்றிற்குப் பலன் கிடைக்கும். இவற்றை இங்கே தருவதற்கு முக்கிய காரணம். முதலில் மாற்றத்தை நாம் கொண்டு வருவோம். இது மாற்றங்களுக்கான காலம். எந்த மாற்றமாயினும் அதனை நாம் முதலில் கடைப்பிடித்துக் காட்டுவோம்.

அப்போது தான் எங்களின் மேல் மற்றையவர்களுக்கு நம்பிக்கைவரும். வாருங்கள் எம்மினிய உறவுகளே எம்மால் முடிந்தவற்றை முதலில் கடைப்பிடிக்கத் தொடங்குவோம்.

1.இன்றிலிருந்து சொப்பிங் பையின் பாவனையை குறைத்திடுவோம். நாமாக துணிப்பையையோ அல்லது சாக்குப்பையினையோ பொருட்கள் வாங்குவதற்குப் பயன்படுத்துவோம்.

அதனால் குறிப்பாக சந்தையில் மரக்கறிப் பொருட்கள் வாங்குவதற்கு சொப்பிங் பையினைப் பயன்படுத்துவதனை முழுமையாகத் தவிர்ப்போம். பொருட்கள் வாங்கும் போது தேவையற்ற வகையில் சொப்பிங்பையில் பொருட்கள் கட்டித் தருவதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலே கடையில் சந்தையில் செப்பிங் பையின் பாவனை குறைக்கப்பட்டு விடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறை;

# மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி

(மன்னார்)

**'நூறு கோடி மக்களின் எழுச்சி-2023 பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற வாழ்வை கொண்டாடுவோம்' எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம்பெற்றது.**

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டதோடு, மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.




பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை நிறுத்தி உடல் உள ரீதியாக பெண்களை பாதுகாக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த கவனயீர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டார்கள். இதன் போது பெண்களால் பறை இசை ஒலிக்கப்பட்டு பெண்கள் அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பாடல்கள் இசைக்கப்பட்டன. மேலும் மன்னார் பிரதான நகர சுற்றுவட்டத்தின் ஊடாக ஊர்வலமாக சென்று பெண்ணியம் சார்ந்து வரையப்பட்டிருந்த சுவர் ஓவியங்களைப் பார்வையிட்டனர்.

அத்துடன் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ஒன்றிணைவோம், வன்முறைகளில் இருந்து விடுதலை பெற சமூகங்களுக்காக ஒன்றிணைவோம், முதலாளித்துவத்தின் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து விடுதலை பெறுவோம் என எழுச்சி கொள்வோம், பூமிக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர எழுச்சி கொள்வோம் எனும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (4-6-285)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் கப் ரக வாகனத்தில் 15 முதிரை மரக்குற்றிகளை சூட்சுமமான முறையில் மறைத்து கடத்த முற்பட்ட சம்பவம் கடந்த 12 ஆம் திகதி முறியடிக்கப்பட்டது.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது வாகன சாரதி கைது செய்யப்பட்டதுடன் வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-316)

# சோதிட களஞ்சியம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சோதிட களஞ்சியம் பகுதி I,II நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப் பாணம், சீனியர் வீதி, கலட்டி எச்சாட் டிமகாமாரி தேவஸ்தான திருமண மண்டபத்தில் சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலை வர் கலாநிதி. ந.ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-33)




நந்திலி

பக்கத்து வீட்டு பொண்ணு
ஒரு கிண்ணத்துல வச்சு
என்னமோ மூஞ்சில தேச்சுட்டு
இருந்துச்சு என்னனு
கேட்டா தக்காளி
, உருளைக்கிழங்கு, கொத்தமல்லி,
புதினா, தயிர் கலந்து மிக்சில
அரைச்சு பேசியல் பண்ணுதாம்
சரி கொடு நான்
கொஞ்சம் தேச்சுக்குறேன்னு
பொய் சொல்லிக்கிட்டு
வாங்கி தோசைக்கு தொட்டு
தின்னுட்டேன்

ஆர்த்தி

இந்த உலகத்துல நல்லவன் கெட்டவன்னு
யாரும் இல்லை. மற்றவங்களுக்கு
புடிச்ச மாதிரி இருந்தா நல்லவன் நமக்கு
புடிச்ச மாதிரி இருந்தா கெட்டவன்



சாக்சவி

குத்துவிளக்கு
போல
பெண்களைத்
தேடுகிறன்றனர்
ஆண்கள்.
அலாவுதீன்
விளக்குகளைப்
போல
ஆண்களைத்
தேடுகின்றனர்
பெண்கள்.



சபேசன்

எல்லோரிடமும்
உதைபடும்
காலபந்தாய்
இருக்காதே
சுவரில்
எறிந்தால்
திரும்பி
வந்து
முகத்தில் அடிக்கும் கைப்பந்தாயிரு



சுதர்சன்

காதலன்- நாம கல்யாணம்
பண்ணிக்கிட்டு
ஓடிப்போபோவாமா?
காதலி- செருப்பு பிஞ்சிடும்
காதலன் நல்ல செருப்பா
போட்டுக்கிட்டு வாம்மா

தருன்

உன்னால முடியாதுன்னு
யாராவது சொன்னா நீ நம்ப
வேண்டியது அவங்கள இல்ல
உன்னை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர[illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 120

# ஒரு இளைஞனின் மனநிலை மாற்றம்



துறவி ஒருவர் மேடை ஒன்றில் சொற்பொழிவு ஆற்றுகையில் அவையில் பார்வையாளராக இருந்த ஒரு இளைஞனை கூப்பிட்டு மேலே வரும்படி அழைத்தார்.

அந்த இளைஞனிடம் ஒரு கடற்கரையில் நடந்து செல்லும் போது அழகான பெண் முன்னால் நடந்து வரும் போது என்ன செய்வீர்கள் எனக் கேட்டார் துறவி.

அந்த இளைஞன் அவளின் அழகினை, வர்ணனையை நான் இரசித்து மனதிற்குள் பாராட்டத் தொடங்குவேன் என்றான்.

மீண்டும் துறவி கேட்டார். உன்னை அந்தப் பெண் கடந்து சென்ற பிறகும் நீ திரும்பிப் பார்ப்பாயா?

ஆம் என் மனைவி என்னுடன் இல்லை என்றால் திரும்பிப் பார்ப்பேன் எனச் சொல்ல கூட்டத்தில் இருந்த அனைவரும் சிரித்தனர்.

அதேநேரம் இன்னொரு நபரினை காணும் போது முதலில் பார்த்தவரின் முகம் மறைந்து போய்விடும் என்றான்.

இங்கிருந்து செல்லும் போது நான் உனக்கு ஒரு புத்தகப் பொட்டலத்தைக் கொடுக்கிறேன். உனது வீட்டிலிருந்து 75 கி.மீ தொலைவில் உள்ள ஒரு செல்வந்தரிடம் அந்தப் பொதியை கொண்டு போய் கொடுக்க வேண்டும்.

புத்தகங்களை விநியோகிக்க செல்வந்தரிடம் வீட்டிற்குச் செல்லும் போது வீட்டின் உள்ளே 10 வாகனங்களும் வீட்டின் வெளியே 5 காவலாளிகளும் நின்றனர். அவரின் வீட்டினைப் பார்த்தாலே அவர் ஒரு செல்வந்தர் என்பது தெரிய வருகிறது.

உள்ளே புத்தகப் பொதியுடன் நீங்கள் வந்த தகவலை அனுப்பிவிட்டதாக காவலாளி கூறினான்.

உள்ளே இருந்து வந்த செல்வந்தர் குறித்த புத்தகப் பொதியை இளைஞனிடம் இருந்து வாங்குகிறார். பின்னர் குறித்த இளைஞனுக்கு நல்ல முறையில் உபசரிப்பு நடந்தது. பின்னர் இவ்வளவு சீக்கிரமாய் புத்தகங்களை என்னிடம் கொண்டு வந்ததுக்கு நன்றி. நீங்கள் எப்படி என் வீட்டிற்கு வந்தீர்கள் எனக் கேட்க புகையிரதத்தில் வந்தேன்.

உடனே செல்வந்தர் தனது சாரதியிடம் இவரை அவரின் வீட்டில் இறக்கி விடு எனக் கூறினார், இப்போது சொல்லுங்கள் இந்த மனிதரை எவ்வளவு காலம் நீ நினைவில் வைத்திருப்பாய்?

அந்த இளைஞன் சொன்னான் அவர் இவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தும் பணிவான மற்றும் அன்பான நடத்தைக்காக அந்த நபரை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

"இதுதான் வாழ்க்கையின் யதார்த்தம்" என துறவி கூறினார்.

"அழகான முகம் குறுகிய காலத்திற்கு நினைவில் இருக்கும், ஆனால் அழகான நடத்தை வாழ்நாள் முழுவதும் நினைவில் இருக்கும்."

உங்கள் முகம் மற்றும் உடலின் அழகை விட உங்கள் நடத்தையின் அழகில் கவனம் செலுத்துங்கள். வாழ்க்கை உங்களுக்கு சுவாரஸ்யமாகவும் மறக்க முடியாத அழகாகவும் மற்றவர்களுக்கு உத்வேகமாகவும் மாறும்.

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை

(கொழும்பு)

இலங்கையில் ஒரு முறை பயன்படுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 7 வகையான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை தடைசெய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கரண்டிகள், முட்கரண்டிகள், கத்திகள், தயிர்க் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரிங் ஹொப்பர் தட்டுகள், பிளாஸ்டிக் மாலைகள் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள் தடை செய்யப்படவுள்ளன. (நி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

**புதிய அனுமதிகள்**

1. கல்வியியல் முதுமாணி (MED) - 2023/24 (அணி VII) வவுனியா பிராந்திய நிலையம்
2. சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுமாணி (Master of Environmental Management) 2022/23 (அணி III )
3. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGD in Library & Information Science) 2022/23 (Batch IV)
4. சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி (MSc in Health Management) 2023/25 (Batch III)
5. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ். Postgraduate Diploma in Teaching English as a second language 2021/23 (Batch III)
6. பிரதேச திட்டமிடலில் முதுமாணி (Batch III)
7. தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணி 2023/24 (Batch II)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்..

விண்ணப்ப முடிவுத்திகதி 15.03.2023
மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3608

**பதிவாளர்.** (சி-5968)



## 2 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்...



மலர்வு 17.05.1958
உதிர்வு 07.02.2021

அமரர்.
**நித்தியானந்தம் லங்கநாதன்**
திதி:தசமி(15.02.2023)

ஆண்டுகள் கடந்தோடுகின்ற போதும் -அப்பா
உங்கள் இழப்பிலிருந்து இன்னும்
நாங்கள் மீளவில்லை- இருப்பினும்
காலத்தின் போக்கில்
கடமைக்கென வாழ்கின்றோம்.

அப்பா என்று அழைக்க ஏங்கும்- எம்
உதடுகளுக்கு இன்று ஆறுதல் சொல்ல யார்
கனவுகளில் கூட உங்கள் சுவடுகள் தேடி
கண்களை மூடி உறங்கச் செல்கின்றோம்

எதிர்பார்ப்போடு இருந்தோம்- அப்பா
எமை ஆளாக்கிய உங்களை
பெருமை கொள்ளச் செய்யும்-அந்த
ஒரு நாளிற்காக- அதுவும்
கனவாகிப் போய்விட்டதே-அப்பா
உங்களோடு நாம் கழித்த நாட்கள்
ஒவ்வொன்றையும் எண்ணுகையில்
அப்படி ஒரு காலம்- மீண்டும்
வந்திடாதோ என எங்கள் மனம்
ஏங்கித் தவிக்கின்றது- அப்பா
என்றும் உங்கள் நினைவுகளுடன் நாங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-5967)

அம்பன், குடத்தனை. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 103





கோட்டை மதிலைச் சுற்றிலும் இருந்த வீதிகளின் வழியாக வந்தியத்தேவன் வேடிக்கை பார்த்துக் கொண்டே மெதுவாகச் சென்றான். அன்று பல காததூரம் பிரயாணம் செய்திருந்த அவனுடைய குதிரை மிகக் களைத்திருந்தது. சீக்கிரத்தில் அதற்கு ஓய்வு கொடுக்க வேண்டியதுதான்.

இல்லாவிடில் நாளைக்கு அவசியம் ஏற்படும் போது இக்குதிரையினால் பயனில்லாமல் போய்விடும்! வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் விரைவில் கண்டுபிடித்தாக வேண்டும்! தஞ்சைபுரி அப்போது புதிதாகப் பல்கிப் பெருகிப் பரந்து வளர்ந்து கொண்டிருந்த நகரம். அதிலும் அப்போது மாலை நேரம் நூற்றுக்கணக்கான வீதி விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிவீசத் தொடங்கியிருந்தன.

வீதிகளெல்லாம் 'ஜே, ஜே' என்று ஒரே ஜனக் கூட்டம். வெளியூர்களிலிருந்து பல அலுவல்களின் நிமித்தமாக வந்தவர்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் சோழ நாட்டுப் பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வந்தவர்களும் இருந்தார்கள்.

புதிதாக சோழ சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளிலிருந்து வந்தவர்களும் காணப்பட்டார்கள். பொருனை நதியிலிருந்து பாலாற்றங்கரை வரையிலும் கீழைக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரையிலும் பரந்திருந்த தேசங்களிலிருந்து தலைநகருக்குப் பலர் வந்திருந்தார்கள்.

விந்திய மலைக்கு வடக்கேயிருந்து வந்தவர்களும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்தவர்களுங் கூடச் சிலர் அம்மாநகரின் வீதிகளில் ஆங்காங்கே தோன்றினார்கள்.

அப்பம், அதிரசம் முதலிய தின்பண்டங்கள் விற்ற கடைகளில் மக்கள் ஈ மொய்ப்பது போல் மொய்த்து, அப்பண்டங்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். வாழைப்பழங்களும் வேறு பலவிதக் கனிகளும் மலை மலையாகக் குவிந்து கிடந்தன.

பூக்கடைகளைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. முல்லையும் மல்லிகையும் திருஆத்தியும் செண்பகமும் புஷ்பக் குன்றுகளைப் போல் காட்சி தந்தன. அந்த மலர்க் குன்றுகளைச் சுற்றிப் பெண்மணிகள் வண்டுகளைப் போல் ரீங்காரம் செய்து கொண்டு மொய்த்தார்கள்.

புஷ்பக் கடைகளினருகில் சென்றதும் வந்தியத்தேவன் அந்தப் பூக்கார வாலிபனை நினைத்துக் கொண்டான். அவனை மறுபடியும் பார்க்கக் கூடுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்? இந்த நகரில் வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் அவனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமல்லவா? இப்படி எண்ணிய போதே சற்றுத் தூரத்தில் அந்த வாலிபன் வந்து கொண்டிருப்பதை வந்தியத்தேவன் கண்டான். குதிரையிலிருந்து இறங்கி அவனை அணுகினான்.

"தம்பி! பூக்குடலைகளில் ஒன்றையும் காணோமே" பூவெல்லாம் எங்கே? விற்றாகிவிட்டதா?" என்றான்.

"விற்பதற்காக நான் பூக் கொண்டு வரவில்லை. கோயில் பூஜைக்காகப் பூக் கொண்டு வந்தேன் பூவைக் கொடுத்தாகி விட்டது; வீட்டுக்குத் திரும்பிப் போகிறேன்."

"எந்தக் கோயிலுக்கு நீ இந்தப் புஷ்பக் கைங்கரியம் செய்கிறாய்?"

"தளிக்குளத்தார் ஆலயம் என்று கேட்டதுண்டா?"

"ஓகோ! தஞ்சைத் தளிக்குளத்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கோவில் தான் போலிருக்கிறது பெரிய கோவிலா அது?"

"இல்லை சிறிய கோவில்தான் கொஞ்சகாலமாக இத்தஞ்சையில் துர்க்கையம்மன் .கோவிலுக்குத் தான் மகிமை அதிகம்.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### ஆசனோஷ்ணம்

(நேற்றைய தொடர்ச்சி...)

அவர் கண்கள் மிரள மிரளப் பார்த்ததைக் கண்டு அவருக்கு நினைவு மங்கி, புத்தி பேதலிக்கிறதோ என்று நினைத்தார்கள்.

சிறிது நேரத்தில் அவர் சற்றுத் தெளிவாகவே பேசினார். சிஷ்யர்களுக்கு அவர் பேச்சு புரிந்தது.

"அருமை சிஷ்யர்களே! எனக்கு அந்திம காலம் நெருங்கி விட்டதாக உணர்கிறேன். இனி என் ஆத்மா இந்த உடலில் தங்கப் போவதில்லை. ஆகவே நீங்கள் எனக்குச் சமாதிக் குழியைத் தோண்டுங்கள். அதிலே என்னைப் பக்குவமாக இறக்கி வையுங்கள். நல்லடக்கத்துக்கு வேண்டிய எல்லாக் காரியங்களுக்கும் தகுந்த ஏற்பாடு செய்து வையுங்கள்."

குருநாதர் அவ்வாறு குழறிக் குழறிக் கூறி முடித்த போது அவர் கண்கள் மட்டுமல்ல... சிஷ்யர்கள் கண்களும் குளங்களாகவே ஆகியிருந்தன.

அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "என்ன குருநாதரே, இப்படிச் சொல்லிவிட்டீர், உங்களுக்கு இப்போது என்ன ஆயிற்று? அந்த ஆருடக்காரன் ஆசன சீதம் ஜீவம் நாசம் என்று சொன்னானே...! அப்படி ஆசன, சீதம் ஆனால் தானே ஆவி போவதற்கு அடையாளமாகும்?" என்று கேட்டார்கள்.

"ஆமாம். பள்ளத்தில் விழுந்தபோது ஆசனம் அதாவது என் இருப்பிடம் நனைந்து குளிர்ந்திருந்தது. அதற்கு காரணம் பள்ளத்திலிருந்த நீரும் சேரும் என்று நினைத்தேன் ஆனால் நீங்கள் தான் நன்றாகத் துடைத்து என்னைக் குதிரையில் ஏற்றிக் கொண்டு வந்தீர்களே! அதற்கப்புறமும் 'என் இருப்பிடம் அதிகமாகக் குளிர்ந்து போய் விட்டது.

அதை நான் உங்களுக்கு அப்போது சொல்லவில்லை. ஆருடக்காரன் சொன்னது போல் அந்த அறிகுறி பள்ளத்தில் விழுவதற்கு முன்பே ஏற்பட்டிருக்குமோ என்று பயமாக இருக்கிறது. இருந்தாலும் சாவைத் தடுக்க முடியுமா,

சாவின் அடையாளங்களை முன்கூட்டியே தெரிந்து கொண்ட பிறகும் சாந்தியோடு இருக்க முடியுமா, ஆகவேதான் சாவுக்குப் பிறகு சாந்தியடைய சடங்குகளை எல்லாம் சரியாகச் செய்து வையுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார் குரு.

அவர்களுக்கும் குரு சொல்வது உண்மை என்றே தோன்றியது. அதனால் பயமும் கவலையும் கொண்டார்கள். இருந்தாலும் அதை குருவுக்குக் காட்டிக் கொண்டால் அவர் கவலை மேலும் அதிகமாகிவிடும் என்று கருதினார்கள். அவருக்கு அன்புடன் ஆறுதலாகப் பல வார்த்தைகளைச் சொலித் தேற்ற முயன்றார்கள். எனினும் அதில் தோற்றுப் போனார்கள். குருவுக்குக் கவலை குறையவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது.
– செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருப்பதாக, உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் வெளியிட்ட அறிவிப்பு மிகப்பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் (13ஆம் திகதி) தமிழகத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய பழ.நெடுமாறன்; தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார். அவர் நலமாக இருக்கிறார். அவரின் மனைவி, மகள் ஆகியோரும் நலமே உள்ளனர்

அவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டு. அவரின் அனுமதியுடனேயே தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதான இத்தகவலை வெளிப்படுத்துகிறேன் எனக் கூறியுள்ளார்.

பொதுவில் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற தகவலை பழ.நெடுமாறன் முன்பும் பல தடவைகள் கூறிவந்துள்ளார்.

எனினும் அதுபற்றி எவரும் பெரிதுபடுத்தவில்லை.

ஆனால் இப்போது நீண்டகாலத்துக்குப் பின்பாக, அதற்கென்றே விசேட ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து, தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என பழ.நெடுமாறன் கூறியமை பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

தவிர, தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற தகவலை பழ.நெடுமாறன் தவிர்ந்த வேறு யாரேனும் கூறியிருந்தால், அதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை இராது.

ஆனால் பழ.நெடுமாறன் மதிப்புக்குரிய ஒரு தலைவர்.

அவர் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ளனர்.

தவிர, அவர் தவறான தகவல்களைப் பரிமாற்றம் செய்யக்கூடியவரும் அல்ல என்ற நிலையில், அவரின் அறிவித்தல் சந்து பொந்து எங்கும் பேசுபடு பொருளாகியுள்ளது.

தமிழ் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழக அரசியல் தலைவர்கள் எனப் பலரும் பழ.நெடுமாறனின் அறிவித்தல் தொடர்பில் தத்தம் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

இதில் சிங்களத் தலைவர்களின் கருத்துக்கள் பிரபாகரன் உயிருடன் இருப்பதற்கான சாத்தியம் இல்லை என்பதாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

எதுவெவ்வாறாயினும் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற பழ.நெடுமாறனின் அறிவிப்பு சிங்களத் தரப்புகளிடையே கடுமையான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இதற்கும் மேலாக, தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்தால், கடந்த 14 ஆண்டுகளாக தன் இருப்பை வெளிப்படுத்தாமல் அவர் மௌனமாக இருந்தது ஏன்?

அவர் உயிருடன் இருப்பதான தகவலை புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய விடுதலைப் புலி அமைப்பில் இருந்தவர்கள் வெளிப்படுத்தாதது எதற்காக என்ற கேள்விகள் தமிழ் மக்களிடம் எழவே செய்யும்.

எது எவ்வாறாயினும் காலம் என்பதுதான் அனைத்து உண்மைகளினதும் காவலன் என்பதால், காலம் கனியும்போது உண்மைகள் நிச்சயம் வெளிப்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# ஐ.எம்.எப் இணக்கப்பாட்டை எட்டாமல் எவராலும் நாட்டை ஆள முடியாது

## அமைச்சர் பந்துல குணவர்தன

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் மார்ச் இறுதிக்குள் இணக்கப்பாட்டை எட்டுவதற்கே முயற்சிக்கின்றோம். சீனா அதற்கான நிதி உத்தரவாதத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அவ்வாறன்றி நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடன் மறுசீரமைப்புக்கள் இன்றி கடன் உதவியை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பில் நிபுணத்துவம் மிக்க அதிகாரிகள் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கமைய இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் என்பன சாதகமான பதிலை வழங்கியுள்ளன. அதேபோன்று சீனாவும் 2 வருட கால அவகாசம் என்ற சாதகமான பதிலை வழங்கியுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த கால அவகாசம் போதாது என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி, திறைசேரி மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் எவ்வாறேனும் மார்ச் இறுதிக்குள் இதனை நிறைவடையச் செய்வதற்கு பெரும்பாடுபட்டு வருகின்றனர். இந்த முயற்சி வெற்றியடையாமலிருக்க முடியாது.

மாறாக வெற்றியடையாவிட்டால் யார் வந்து எந்த வழியில் நாட்டை முன்னேற்றுவதாகக் கூறினாலும் அதனை செய்ய முடியாது. இந்த வேலைத் திட்டங்களை வெற்றியடைச் செய்யாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்றார். (ம-7)

### நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தில்

# குறைந்த வருமானம் பெறும் எந்தவொரு குடும்பத்தையும் தவறவிட வேண்டாம்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி பெற்றுக் கொடுக்கும் வேலைதிட்டத்தின்போது தேவையுடைய எவரையும் தவறவிட வேண்டாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, 28 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு (2,850,000) அரிசி பெற்றுக்கொடுப்பதற்காக ஆகக் கூடியது 20 பில்லியன் ரூபாவுக்காயினும் போதுமானளவு நெல்லை கொள்வனவு செய்யுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

நெல் கொள்வனவு செய்வது தொடர்பில் நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பொறிமுறை ஒன்றினூடாக அதனை குறைந்த வருமானம் பெறுவோருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

குறைந்த வருமானம் பெறும் 20 இலட்சம் குடும்பங்க்ளுக்கு மாதாந்தம் தலா 10 கிலோகிராம் அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் வேலைதிட்டத்தின் கீழ் 61,600 மெட்ரிக் தொன் நெல்லை விலைக்கு வாங்குவதற்காக 10,000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு ஏற்கனவே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பயனடைவதற்காக 28 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டிருப்பது இந்தக் கலந்துரையாடலின் மூலம் தெரிய வந்துள்ளது. இதற்கமைய, அவர்கள் அனைவருக்காகவும் இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உத்தரவு வழங்கினார். (ம-7)

# சுற்றிவளைப்பின் போது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் பெண் பலி

தெமட்டகொட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவத்துடன் தொடர்புடைய 2 பாதுகாப்புப்படையினரை பொரள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு, வனாத்தமுல்ல அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 25 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கி தவறுதலாகச் சுட்டதில், வீட்டில் இருந்த பெண் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

### சிறுநீரக கடத்தல்

# சந்தேகநபர்கள் தொடர்ந்து மறியல்

(கொழும்பு)

இராஜகிரியவிலுள்ள வைத்தியசாலையொன்றில் இடம்பெற்ற சிறுநீரக கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

### எஸ்.ஜி சேனாரத்னவிற்கு

# அரசியலமைப்புச் சபை அங்கீகாரம் வழங்கியது

(கொழும்பு)

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக எஸ்.ஜி.சேனாரத்னவை நியமிப்பதற்கு அரசியலமைப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அரசியலமைப்புச் சபை இதற்கான நியமனத்தை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது,

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக கடமையாற்றிய மோகன் சமரநாயக்க மற்றும் உதேனி விக்கிரமசிங்க ஆகியோர் அண்மையில் இராஜினாமா செய்தனர்.

இராஜினாமா செய்ததன் மூலம் வெற்றிடமாக இருந்த உறுப்பினர் ஒருவருக்குப் பதிலாக எஸ்.ஜி.சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச் சூடு மூவர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மாநில பல்கலைக் கழகத்தில் துப்பாக்கிதாரி ஒருவர் மூன்று பேரை சுட்டுக் கொன்றுவிட்டு மேலும் ஐந்து பேரைக் காயப்படுத்தி விட்டு தன்னைத்தானே சுட்டுக் கொண்டார் என அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு லான்சிங் வளா கத்தில் உள்ள பெர்கி ஹால் என்ற கல்விக் கட்டடம் மற்றும் அருகிலுள்ள மாண வர் சங்க வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு இந்த துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந் தது. கறுப்பினத்தவர் என வர்ணிக்கப்படும் துப்பாக்கி தாரி, தப்பியோடிய பின்னர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி)

# மேலும் எல்லைக் கடவைகளை திறக்க சிரியா அரசாங்கம் ஒப்புதல்




(டமாஸ்கஸ்)

கடந்த வாரம் ஏற்பட்ட பய ங்கர நிலநடுக்கத்தால் பேர ழிவிற்குள்ளான சிரியாவிற்கு உதவிகளை வழங்குவதற் காக மேலும் இரண்டு எல் லைக் கடவைகளை திறக்க சிரியா அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

ஒரு கடவை மட்டுமே சிரியா பயன்படுத்துகின்ற நிலையில், இது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ட ரெஸின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்து ள்ளார்.

நாட்டின் மீது விதிக்கப் பட்ட மேற்கத்தேய பொருளா தாரத் தடைகளின் தாக்கத் தால் மீட்புப் பணிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி பஷர் அல்- அசாத் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால், அசாத் அரசா ங்கத்தின் தவறான நிர்வா கம் மற்றும் நாட்டின் அனை த்துப் பகுதிகளுடனும் ஈடு பட மறுப்பதும் முக்கிய தடைகள் என்று சர்வதேச உதவிக் குழுக்கள் கூறு கின்றன.

துருக்கியில் ஒரு மில்லிய னுக்கும் அதிகமான மக்கள் வீடிழந்துள்ளனர், சிரியா வில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்க லாம் என்று உதவி அமை ப்புகள் எச்சரிக்கின்றன.

துருக்கி, சிரிய ஆகிய இரு நாடுகளிலும் உள்ள மீட்புக் குழுக்கள் இப்போது பரந்த பகுதியில், மீட்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டன, மேலும் உயிர் பிழைத்தவர்களைக் கண்டு பிடிப்பதற்கான வாய்ப்புகள் மங்கி வருகின்றன.

இரு நாடுகளிலும் பய ங்கர நிலநடுக்கத்தில் ஏறக் குறைய 40,000 பேர் உயிரிழந்துள்ளதாக அறிய ப்படுகிறது. (நி)

# காதலர் தினத்தையொட்டி சிறப்பு டூடுல் வெளியீடு




(வோஷிங்டன்)

கூகுள் நிறுவனம் அவ்வப் போது தனது தேடுபொறியான கூகுள் தளத்தில், பிரபல ஆளு மைகளின் பிறந்தநாள், பண் டிகை நாட் கள், முக்கிய தினங்கள் போன்ற நாட் களில் சிறப்பு டூடுலை இந்த பிரவுசர்க ளில் வெளி யிடுவது வழ க்கம்.

ஆண்டு தோறும் பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தின த்தை சிறப்பிக்கும் வகையில் கூகுள் நிறுவனம் புதிய டூடுல் வெளியிட்டுள்ளது. (நி)

# கமிலாவுக்கு கொவிட்



(லண்டன்)

சார்ளஸ் மன்னரின் மனைவியான கமிலாவுக்கு கொவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக பக்கிங் ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. (நி)

# 178 மணிநேர போராட்டத்தின் பின் உயிருடன் மிட்கப்பட்ட சிறுமி



(அங்காரா)

துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டு 178 மணி நேர த்திற்கு பின்னர் கட்டட இடி பாடுகளில் இருந்து 6 வயது சிறுமி உயிருடன் மீட்கப்ப ட்டுள்ளார்.

இந்த நிலநடுக்கத்தில் இதுவரை 35,000 பேர் உயிரிழந்து இருப்பதாக அறி விக்கப்பட்டுள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கானோர் காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை, துருக்கியில் கட்டட இடிபாடுகளுக்கி டையே சிக்கியிருந்த 6 வயது சிறுமியை இந்தி யாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட மோப்ப நாய்கள் காப்பாற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக சென்றுள்ள இந்திய மீட்புக்குழுவின ருடன், தேசிய பேரிடர் மீட் புப்படையை சேர்ந்த மோப்ப நாய்களும் கொண்டு செல்ல ப்பட்டுள்ளன.

இரு மோப்ப நாய்க ளுமே நூர்தாகியில் இடி பாடுகளுக்கு அடியில் சிக்கி யிருந்த 6 வயது சிறுமியை காப்பாற்றியாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 | 300 |
| தக்காளி | 250 | 250 | 280 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 240 |
| கோவா | 50 | 60 | 100 | 100 |
| கரட் | 200 | 180 | 220 | 240 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 160 | 160 | 140 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 250 | 350 | 320 | 500 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 600 | 500 | 500 | 500 |
| லீக்ஸ் | 320 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 100 | 150 | 140 | 160 |
| கறிமிளகாய் | 700 | 500 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 300 | 350 | 320 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 40-100 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 170 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | -- | 120 |


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் உள்ள பழைய பத்திரிகைகள், உழவியந்திர பற்றறி, ரயர், கண்ணாடிப் போத்தல், மற்றும் Water tank என்பன பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

**இடம் : உப அலுவலகம், புலோப்பளை, பளை.**
**திகதி : 22.02.2023**
**காலம்: மு.ப 10.00 மணி**

நிபந்தனைகள்:

- ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துவதுடன் ரூபா 500.00 மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக செலுத்த வேண்டும்.
- சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
- உரிய பொருட்களை பார்வையிட விரும்புவோர் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அலுவலக கடமை நேர நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தொடர்பு கொள்ளலாம்.
- மேலதிக நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
- தற்கால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

**சு.சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

(அ2002)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகர...

கலந்து கொண்டனர்.

ரெலோ கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி முதல்வர் து. ஈசன், புளொட்டைச் சேர்ந்த பி. தர்சானந், சு. சுபாதீஸ் ஆகிய இரண்டு உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் எஸ். சாந்தரூபனும் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக 24 வாக்குகளும் ஆதரவாக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

(ம-7,33,104)

## சிங்கள மொழி...

நீதிமன்றம் வருகை தருமாறு கூறும் பொலிஸ் கட்டளையினை நேற்று பொலிஸார் வழங்கியிருந்தனர்.

அந்தக் கட்டளை சிங்கள மொழியில் மாத்திரம் இருந்ததன் காரணமாக சிங்கள மொழி தனக்கு வாசிக்கத் தெரியாது.

ஆகவே இந்தக் கட்டளையினைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தமிழில் கொண்டு வந்து தருமாறு கூறி அவர்களிடம் மீளக் கையளித்தார்.

பின்னர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து கொண்டு வந்து கொடுத்த போது நீதிமன்றத்திற்கு தன்னை வருவதற்கு அழைக்கும் அழைப்பை நீதிமன்றம்தான் வழங்க முடியுமே தவிர நீதிமன்றத்திற்கு அழைக்கும் அழைப்பை பொலிஸாரினால் எனக்கு வழங்க முடியுமா? என சிறீதரன் எம்.பி பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார். (ம-7,100)

## மீனவரின் சடலம்...

யொதுங்கியுள்ளது.

இவ்வாறு சடலமாக கரையொதுங்கியவர் கரிதாஸ் வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த பியதாஸ் ரவிச்சந்திரன் (வயது-39) என்பவராவார்.

வடமராட்சி கிழக்கு, குடாரப்பு பகுதிக் கடற்கரையில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இருவர் கட்டுமரத்தில் கடற்றொழிலுக்காக சென்றிருந்தனர். இருவர் தொழிலுக்குச் சென்ற நிலையில் கட்டுமரம் கடலில் மூழ்கியுள்ளது.

இதன்போது மீனவர் ஒருவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளார். மற்றைய மீனவர் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார். இந்நிலையில் அதிகாலை சடலம் கரையொதுங்கியுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார்.

(ம-7,60,104)

## தேர்தலை...

மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன.

வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பொருளாதாரத்தினை சுட்டிக் காட்டி அதற்கான நிதியினை வழங்க மறுப்பதன் வாயிலாக அரசாங்கம் தேர்தலுக்கு தடையாகச் செயற்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றிலும் பிரதிபலிப்பதற்கான அபாயம் காணப்படுகின்றது.

ஜனநாயகத்தை நிலைநிறுத்த அரசாங்கம் தன்னிச்சையாக முன்வந்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு நிதிச் சுதந்திரத்தை வழங்கி தேர்தலை நடத்த வேண்டும்.

அவ்வாறில்லையாயின் எதிர்காலச் சந்ததியினரை இந்த நடவடிக்கை வெகுவாகப் பாதிக்கும் என பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (ம-7)

## பிரபாகரன்...

உடனடியாக மறுப்பு தெரிவித்தது.

இது ஒருபுறம் இருக்க, நெடுமாறனின் இந்தக் கருத்தை முழுமையாக புறந்தள்ளிவிட முடியாது என்பதால், பிரபாகரன் பற்றிய தகவல்களை மீண்டும் திரட்ட மத்திய உளவுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

பிரபாகரன் தொடர்பான தகவல்களை தமிழக கியூ பிரிவு பொலிஸாரும் திரட்டத் தொடங்கியுள்ளனர். தமிழகப் பொலிஸாரின் உளவுப் பிரிவு கூடுதல் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம், அப்பிரிவு ஐ.ஜி.செந்தில்வேலன், கியூ பிரிவு எஸ்.பி.கண்ணம்மாள் தலைமையிலான பொலிஸார் மீண்டும் விசாரணையில் இறங்கியுள்ளனர். (ம-7)

## உள்ளூராட்சி...

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற நேற்றைய சந்திப்பின்போதே அரசியல் கட்சி செயலாளர்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பை நடத்த தேசிய தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது.

இருப்பினும் முன்னதாக திட்டமிட்டபடி இன்று தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகளை விநியோகிக்க முடியாது என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்மூலம் உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்படும் அபாயம் உருவாகியுள்ளது. (ம-7)

## தேர்தலுக்கான...

குழுவின் உறுப்பினர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளர்கள், பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க் கிழமை காலை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அரசியலமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர் வரும் வாரம் தபால் மூல வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் இவ்வார காலத்திற்குள் நிறைவு பெற வேண்டும், இருப்பினும் நிதி நெருக்கடியால் அச்சிடல் பணிகளை அரச அச்சகத் திணைக்களம் இடை நிறுத்தியுள்ளது.

திறைசேரி நிதி வழங்குவதை உரிய நேரத்திற்கு வழங்குவதை தாமதப்படுத்தினால் ஆணைக்குழுவினால் எவ்வாறு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு அரசியல் கட்சி செயலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளது.

வழங்கிய வாக்குறுதிக்கு அமைய உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுவது நீதிமன்ற அறிவுறுத்தலை புறக்கணிப்பதாக கருதப்படும்.

ஆகவே தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தை நாடுவது சிறந்த தீர்வாக அமையும் என அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர். (ம-7)

## தலைவர் பிரபா...

வழங்கிய செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், பழ.நெடுமாறன் வெளியிட்ட கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

நான் முன்பே சொல்லியிருக்கின்றேன். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் லட்சியங்கள் இருக்கக்கூடும். அது வேறு. ஆனால், அவர் இருக்கின்றார் என்று சொல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

அவ்வாறான கருத்து பிழை என்றே நான் சொல்வேன் என்றும் அருட்தந்தை இம்மானுவேல் சுட்டிக்காட்டினார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1486
மிதுனம் 5 3 4 5 8 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1061
L 06 13 33 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.14 சீட்டிழுப்பு இலக்கம் 3273
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 20 34 35 53
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1379
G 23 50 56 67 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 340
மீனம் 03 21 31 58 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/14
சீட்டிழுப்பு இலக்கம் 5031
P 3 4 2 5 9 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2006 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.14 தினம் செவ்வாய்க்கிழமை
X 22 44 46 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,694,360/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.14
சீட்டிழுப்பு இல : 4167
வர்ணம் : பச்சை
ரூ. 4,239,340/-
வெற்றி இலக்கங்கள் 05 11 29 70 R
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 288
சீட்டிழுப்பு திகதி 2023.02.14
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 29 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,999,040/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-02-14
வெற்றி வாரம் 3718
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 03 17 25 61 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,802,720/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 28 15 45 61 66
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1182
திகதி 2023.02.14 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 305,869,092.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1832
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.14
ரூ. 5,233,700/-
வெற்றி இலக்கங்கள் 01 04 44 67 H
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை அரசு நிறுத்தாது - பந்துல

(கொழும்பு)

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக்கூடாதுஎன்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனஅமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஆனால் நாட்டின் தற்போதைய உண்மையான நிதி நிலைமை குறித்து திறைசேரி செயலாளர் நீதிமன்றில் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த் அரசாங்கங்கள் வெளிநாட்டுக்கடன்களை பெற்றுக்கொண்டு பணத்தைச்செலவிட்டதாக பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தினால் அவ்வாறு செய்ய முடியாது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14568)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலை வாய்ப்பு

வீட்டிலிருந்தபடியே ஒரு மாதகாலத்துக்கு மட்டும் தற்காலிக தொலைபேசி அழைப்பாளர் பணிக்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அழைக்கவும் :-

077 565 6633 (C-5974)

## தற்காலிக வேலைவாய்ப்பு

யாழ். பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பணியாற்றக்கூடிய ஆண் ஒருங்கிணைப்பாளர் ஒரு மாதகாலத்துக்குத் தேவை. மோட்டார் சைக்கிள் கூடுதல் தகுதி. நெகிழ்வான பணிநேரம், கவர்ச்சிகரமான சம்பளம், போக்குவரத்துப்படி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :-

077 565 6633 (C-5975)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-5976)

## சுய தொழில்வாய்ப்பு • நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

V2 TRAVELS 0777-068-777 (C-5976)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் 4 அறைகளுடன் கூடிய வீடு பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :-

077 515 1352 (14616)

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் அரிசி ஆலைக்கு (மில்) வேலை ஆட்கள் தேவை.

உடுவில் மணியம்

Tel Number :-

076 684 9867 (C-5970)

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

## ரோயல் நெய்



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான ரோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-5965)

## கனடா விசாக்கள்

கனடா நாட்டினை மிகக் குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில்செல்ல உடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% உத்தரவாதம்

070 461 4192 (14606)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள்,ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.

நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

• விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
• தரகர் தேவையில்லை.

(14613)

தொடர்புகளுக்கு :- 076 690 6272


# கண்ணீர் அஞ்சலி



அமரர் முடியப்பு றெமீடியஸ்

(சட்டத்தரணி, யாழ் மாநகர சபை உறுப்பினர்)

துன்பத்தில் எவர் இருந்தாலும்
ஓடிவந்து உதவிடும் குணம் கொண்ட
உங்களுக்கா இக்கதி என
எண்ணும் போது மனம்
பதை பதைக்கிறது
அன்பான அண்ணனாய் பழகிய
உதவிய அந்த நாட்களை
ஒருநாளும் மறந்துவிடேன்!
றெமீடியஸ் அண்ணா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈர விழிகளுடன்அன்புத் தம்பி

V.S.B.Pirasanth

(C-5971)

# 45 ஆம் நாள் நினைவு



சிவசுந்தரம் வர்ஷனன்

(Dip In Civil Engineering)

அன்னை மடியில் 12.09.1998 | இறைவன் அடியில் 03.01.2023

குழந்தையாய் தவழ்ந்து குதூகலித்தாய்
பள்ளிப் பருவத்தில் படித்து மகிழ்ந்தாய்
அன்பால் எம்மை அழைத்து மகிழ்ந்தாய்
ஆன்மீகப் பாதையில் ஆனந்தமானாய்
இல்லத்தில் இருந்து இதமாய்க் கலந்தாய்
இசையினில் மிருதங்க வாத்தியம் ஒலித்தாய்
உறவுகளோடு ஒன்றாய் இணைந்தாய்
உயர் கல்வி தன்னில் உயர்ந்து வளர்ந்தாய்
நண்பர்களோடு கூடி நடந்தாய்
பெரியோர் மனங்களில் பண்பாய் உறைந்தாய்
வினைத்திறன் காட்டி காரியங்கள் முடித்தாய்
இன்னும் எத்தனை எத்தனை எண்ணிலா
ஜாலங்கள் காட்டி வளர்ந்த வர்ஷனன்
எங்கள் நினைவினில் என்றும் நிலைப்பாய்
நீள் பெரும் இறைபதம் பெற்றே நிற்பாய்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உன் நினைவில்
அப்பா, அம்மா, அக்கா
மற்றும் உறவினர்கள்

23, உடுவில் வீதி,
மானிப்பாய்
077 844 5713

(14546)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org